

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.11.2025) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற இந்திய கேம் டெவலப்பர்ஸ் சங்கம் மற்றும் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை இணைந்து நடத்தும் 17ஆவது இந்திய கேம் டெவலப்பர்ஸ் 2025 மாநாட்டினை பார்வையிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்னித், எல்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கா.ப.கார்த்திகேயன், இந்திய கேம் டெவலப்பர்ஸ் சங்கத்தின் நிர்வாகிகள் ஸ்ரீதர் முப்பிடி, மன்வேந்ரா சுக்குல் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற இந்திய கேம் டெவலப்பர்ஸ் சங்கம் (GAME DEVELOPERS ASSOCIATION OF INDIA) மற்றும் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை (ELCOT) இணைந்து நடத்தும் 17ஆவது இந்திய கேம் டெவலப்பர்ஸ் 2025 (IGDC 2025) மாநாட்டில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (6.11.2025) தமிழ்நாடு அரசின் எல்காட் நிறுவனத்திற்கும் லக்சயா டிஜிட்டல் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், எல்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கா.ப.கார்த்திகேயன், இந்திய கேம் டெவலப்பர்ஸ் சங்கத்தின் நிர்வாகி ஸ்ரீதர் முப்பிடி, லக்சயா டிஜிட்டல் நிறுவனத்தின் மன்வேந்ரா சுக்குல் ஆகியோர் உடனிருந்தனர்.

### நவ. 10 அன்று

# புதுக்கோட்டை மாவட்டத்திற்கு முதல்வர் வருகை!

## முன்னேற்பாடுப் பணிகள் குறித்து – அமைச்சர் எஸ்.ரகுபதி ஆலோசனை

புதுக்கோட்டை, நவ. 8-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எதிர்வரும் 10.11.2025 அன்று புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை புரிந்து புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தும், பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்க உள்ளதை தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 03.11.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அரசின் திட்டங்கள் சென்று சேரும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் வருகின்ற 10.11.2025 அன்று நடைபெறும் விழாவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப் பணிகளையும் தொடங்கி வைக்கவுள்ளார்கள்.

மேலும் பொதுமக்களின் தேவைகளான வீட்டு மனைப் பட்டா, முதியோர் ஓய்வூதிய திட்டம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் உள்ளிட்ட குறைகளை தீர்க்கும் வகையில் அவர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்க வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பதுடன் அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி விழாவினை சிறப்பான முறையில் நடத்திட வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பின்னர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் அரசு விழா நடைபெறும் குளத்தூர் வட்டம், கீரனூர் மூகாம்பிகை பொறியியல் கல்லூரி மைதானத்தில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் விழா தொடர்பான பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இக்கூட்டத்தில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பா.ஜெயசுதா, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (காவிரிவைகைகுண்டாறு) ஆர்.ரம்யாதேவி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) எஸ்.திருமால், மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, வருவாய் கோட்டாட்சியர்கள் பா.ஐஸ்வர்யா (புதுக்கோட்டை), ப.கோகுல்சிங் (இலுப்பூர்), அபிநயா (அறந்தாங்கி), மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன மற்றும் அனைத்துத்துறை அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் – நூல்”!

# கூட்டுறவுக்காகவே முதல் முறையாக இயற்றப்பட்ட “கூட்டுறவு கீதம்”

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வெளியிட்டார்!

சென்னை, நவ.8-

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நேற்று முன்தினம் (06.11.2025) தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில், நடைபெற்ற “கூட்டுறவு கீதம்” வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், முதல் முறையாக கூட்டுறவுக்காகவே இயற்றப்பட்டுள்ள “கூட்டுறவு கீதம்” பாடலை வெளியிட்டார்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலையாய திட்டமான “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்” நூலினை வெளியிட்டு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள LED விளம்பர பலகையினை திறந்து வைத்தார்கள்.

பின்னர், கூட்டுறவு ஒன்றியங்கள் மூலமாக நடத்தப்படும் உறுப்பினர் விழிப்புணர்வு முகாம், இளைஞர் ஈர்ப்பு முகாம் மற்றும் கூட்டுறவு சேவைகள் குறித்து பொதுமக்களிடம் எடுத்து செல்ல அனைத்து மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களுக்கு ரூ.29,76,108/ மதிப்பீட்டில் உறுப்பினர் கல்வித் திட்ட சாதனங்கள் வழங்கப்பட்டது.

மேலும், கருணை அடிப்படையில் 6 நபர்களுக்கு இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர், கட்டுநர் பணியிடங்களுக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டது.

இவ்விழாவில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசும் போது தெரிவிக்கையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய தலைமையிலான தமிழ்நாடு அரசின் கீழ் செயல்படும் கூட்டுறவுத்துறை, அனைத்துத் துறைகளுடன் இணைந்து செயல்படும் துறையாகவும், அனைத்து துறைகளை மக்களுடன் இணைக்கும் துறையாக வும் செயல்பட்டு வருகிறது.

கூட்டுறவின் மாண்பினையும், கூட்டுறவின் செயல்பாடுகளையும், கூட்டுறவும் மகத்துவத்தையும் விளக்கும் வகையில் இன்றைய தினம் “கூட்டுறவு கீதம்” உருவக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. தேசிய கீதம் எவ்வாறு நாட்டின் பெருமைகளை விளக்குகின்றதோ, அதேபோன்று “கூட்டுறவு கீதம்” முதல்முறையாக கூட்டுறவுக்காகவே இயற்றப்பட்டுள்ளது.

இன்றைய தினம் கூட்டுறவுத் துறைக்கு என்று “கூட்டுறவு கீதம்” இயற்றப்பட்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் என்ற முறையில் என்னால் வெளியிடப்பட்டதை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இனிவரும் காலங்களில் கூட்டுற வுத்துறையின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் ”கூட்டுறவு கீதம்” பயன்படுத்தப்படும்.

“கூட்டுறவு கீதம்” கூட்டுறவுத்துறையின் ஒரு அங்கமாக என்றைக்கும் நிலைத்து நிற்கும்.

“கூட்டுறவு கீதம்” உருவாக்க உறுதுணையாக இருந்த, கூட்டுறவுத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், கூட்டுறவு சங்க பதிவாளர் அவர்களுக்கும், சிறந்த கூட்டுறவு கீதம் பாடலை தேர்வு செய்த குழு தலைவர் தமிழ்கடல் தேவகோட்டை இராமநாதன் அவர்களுக்கும், கூட்டுறவு கீதத்தை எழுதிய ஆனந்த செல்வன் அவர்களுக்கும், கூட்டுறவு கீதத்திற்கு இசையமைத்து அழகாக இங்கு இசைத்த திரைப்பட இசை அமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா மற்றும் இசைக்குழுவினருக்கும், இதற்காக பாடுபட்ட அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுக்கும், எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கே.ஆர்.பெரிய கருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் முனைவர் க.சொ.இரவிச்சந்திரன் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சியின் நிறைவாக இணைப்பதிவாளர் (நுகர்வோர் கூட்டுறவு) வெ.முரளிக்கண்ணன் நன்றியுரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் அரசு முதன்மை செயலாளர் கூட்டுறவு உணவு (மற்றும்) நுகர்வோர் பாதுகாப்புத் துறை சத்தியபிரதா சாகு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார், கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர்கள் மு.வீரப்பன், (நுகர்வோர் பணிகள்), பழனிவேலு, (நிதி மற்றும் திட்டமிடுதல்), சுப்பிரமணியன் (நிதி மற்றும் வங்கியியல்) ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருச்செங்கோட்டில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்ட கழக அலுவலகம் தளபதி இல்லத்தில் பொது மக்களுக்கு எஸ் ஐ ஆர் வாக்காளர் படிவம் குறித்த சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்க உதவிக்கான அலுவலகமான அண்ணா அறிவகத்தை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். விழாவில் மாவட்டச் செயலாளர் கே.எஸ்.மூர்த்தி, ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ., வி.எஸ்.மாதேஸ்வரன் எம்.பி., அருள்ஜோதி, பரசுராமன் கவிப்பிரியா, ஷேக் மீரான், வடிவேல், தினேஷ்குமார், நானா நானி கார்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

